17 அக்டோபர் 2021

Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 29 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்



மாதாந்திர கருப்பொருள்:

**ஆழத்தில் போடுங்கள்**

# இதயத் துடிப்பை மறவாதே

எசாயா 53ம் அதிகாரம் முரண்பாடுமிக்கது. துன்புறும் ஊழியர் மெசியா, அவர், ‘நொறுக்கவும் நோயால் வதைக்கவும் ஆண்டவர் திருவுளம் கொண்டார்’ என இறைவாக்கினரின் வரிகள். 11ம் வசனம் கூறுகிறது, ‘நேரியவராகிய என் ஊழியர் தம் அறிவால் பலரை நேர்மையாளராக்குவார்; அவர்களின் தீச்செயல்களைத் தாமே சுமந்து கொள்வார்’. நமது இதயத் துடிப்பை மறந்து விட்டோமா? ‘அவர்களது தீச்செயல்கள்’ என்பதற்குப் பதில் ‘நமது தீச்செயல்கள்’ என மாற்றிக் கொள்ளத் துணிவோமா?

இயேசு மீது நமது குற்றத்தையும் பாவத்தையும் சுமத்தி விட்டோம். தண்டனையைத் தாங்கி கொண்டு நமக்கு அமைதியைத் தந்துள்ளார். அவரது காயங்கள் நம்மைக் குணமாக்கியது. அவரது தியாகப் பலி நமக்கு நிலைவாழ்வை தந்துள்ளது. நமது மீட்புக்காக இவையெல்லாவற்றையும் இயேசு தாங்கி கொண்டார். மாட்சிமையில் வரும்போது அவர் பக்கத்தில் அமர தங்களை அனுமதிக்க முடியுமா என யாக்கோபும் யோவானும் கேட்ட போது, இயேசுவின் மெசியாத்துவம் பற்றி அவர்கள் கிஞ்சிற்றும் அறிந்திருக்கவில்லை. ஆயினும் அவர்கள், அவரது கிண்ணத்தில் அருந்துவார்கள் என்பதை அவர்களின் சீடத்துவக் குரல் இயேசுவிடம் தெரிவித்தது. **பிறருக்குச் சேவை செய்வதே சீடத்துவத்தின் பெரும் அழைப்பு என்பதை பின்னர் அவர்கள் புரிந்து கொண்டனர்.** மீட்பரைப் பின்பற்றிச் செல்வது, துன்பத்திற்கும் சித்ரவதைக்கும் இறுதியில் வேதசாட்சிக்கும் இட்டுச் செல்லும் என்பதை பெந்தக்கோஸ்துக்குப் பின்னரே அவர்கள் அறிந்து கொண்டனர். அகிரிப்பா மன்னரால் சிரச்சேதம் செய்யப்பட்ட யாக்கோபு முதல் வேதசாட்சி ஆவர். சிறை பிடிக்கப்பட்ட சீடர்கள் பலமுறை தப்பித்தாலும் பின்னர் கிறிஸ்துவின் இதயத் துடிப்போடு இணைந்தனர்.

நாம் எப்படி? ஆழத்திற்குச் செல்ல நாம் தயாரா? அதே கிண்ணத்தில் பருக நாம் தயாரா என இயேசு இன்று நம்மை கேட்டால், ஆம் என்று பதில் சொல்வோமா! பிறருக்குச் சேவை செய்து நமது கிறிஸ்துவ நம்பிக்கையை வளர்க்கும் பல வாய்ப்பை இந்த தொற்றுநோய் காலம் நமக்கு அளித்துள்ளது. பயத்திற்கும் பீதிக்கும் இடங்கொடாமல் இயேசுவின் மீது நம்பிக்கை வைப்போம். பயம் மேலிடும் போது திருப்பாடல் 32 கூறுவது போல நமது கிறிஸ்துவ நம்பிக்கை பொங்கி எழும். மனிதனாக அச்சம் கொள்வதைப் பற்றி நமது தலைமைக்குரு இயேசு அறிந்திருக்கிறார். ‘இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக’ என 2ம் வாசகம் (எபிரேயர் 4:14-16) நமக்கு உறுதியளிக்கிறது.

உங்கள் பங்கு, அதிச மற்றும் அரசு-சாரா இயக்கங்களோடு இணைந்து கொள்ளுங்கள். ஓர் சமூக உதவி தேவைப்படுவோருக்கு நம்பிக்கை ஒளியாக இருப்போம். சேவை செய்யும் போது, நம்மில் இயேசுவின் இதயத் துடிப்பை உணரலாம்.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

“உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்”

(மாற்கு 10, 43)

**இன்றைய வாசகங்கள்:**

எசா. 53, 10-11;
Ps 32, 4-5, 18-20. 22;
எபி. 4, 14-16;
மாற்கு 10, 35 எ 45 (or 42-45).

INTERNAL CIRCULATION ONLY
BUL 42/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org